# வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி
மாநிலச் செய்திகள்
வாசிப்பவர்—கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்
தேதி 14.10.2026 நேரம்—மாலை 6.10 மணி

------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

1. இந்தியாவின் கலாச்சாரப் பயணம், பன்னெடுங்கால **பண்பாட்டுப் பரிமாற்றங்களையும், அறிவுப் பகிர்வையும்**, அடிப்படையாகக் கொண்டது என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

2. ரயில்வே ஊழியர்களுக்கு, 78 நாள் சம்பளத்தை, **போனசாக** வழங்க, மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

3. இந்தியாவில் **புதிதாக கண்டறியப்படும்** காசநோயாளிகளின் **எண்ணிக்கை**, உலக சராசரியை விட, அதிக அளவில் குறைந்துள்ளது.

4. விளையாட்டு வீரர்களின் சாதனைகள், எதிர்காலத்தில் இளைஞர்களை ஊக்கப்படுத்துவதாக அமைய வேண்டும் என, **புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன்** கூறி உள்ளார்.

இந்தியாவின் கலாச்சாரப் பயணம், பன்னெடுங்கால **பண்பாட்டுப் பரிமாற்றங்களையும், அறிவுப் பகிர்வையும்**, அடிப்படையாகக் கொண்டது என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். **இந்திய கலாச்சாரத்தின் உலகப் பிணைப்புகள்** என்பது குறித்து, புதுடெல்லியில்

நடைபெறும் 3 நாள் சர்வதேச மாநாட்டில், இன்று நடைபெற்ற தொடக்க விழாவிற்கு அனுப்பிய செய்தியில், பிரதமர் இவ்வாறு கூறி உள்ளார். நாலந்தா போன்ற இந்தியாவின் **பழங்கால உயர்கல்வி மையங்கள்,** இந்தியாவிற்கும் ஆசிய நாடுகளுக்கும் இடையிலான அறிவுப் பகிர்வை வலுப்படுத்திய நிலையில், தரை மற்றும் கடல் மார்க்கமாகப் பயணம் மேற்கொண்ட, துறவிகள், அறிஞர்கள் மற்றும் வணிகர்களும், இந்தியாவின் அறிவுசார் மரபுகளை உலகெங்கிலும் பரப்பி இருப்பதாக, அவர் தெரிவித்தார். விழாவில் பிரதமரின் செய்தி, மத்திய கலாச்சாரத் துறைச் செயலரால், வாசிக்கப்பட்டது. மத்திய கலாச்சார துறை அமைச்சர் திரு கெஜேந்திர சிங் ஷெகாவத், மாநாட்டின் தொடக்க விழாவில் பேசுகையில், இந்திய கலாச்சாரத்தின் தாக்கம், நாட்டின் பூகோள எல்லைகளைத் தாண்டிப் பரவியதன் வரலாற்றை அறிந்து கொள்ளவும் நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் பாரம்பரிய அறிவின் பங்கைப் புரிந்து கொள்ளவும் இம்மாநாடு உதவிகரமாக இருக்கும் என்றார்.

**மக்கள் சேவை மூலமான தேச சேவை**

**மக்கள் சேவை மூலமான தேச சேவை** என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் **சேவைப் பயணம்**, இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்கிறது. **சேவை மற்றும் நல்லாட்சி** என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப,

2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. **அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி - அனைவருக்கும் சமூக அதிகாரம்** என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பிரதமரின் உஜ்வாலா திட்டத்தினால் விறகுப் புகையினால் ஏற்படும் சுகாதார கேடுகளில் இருந்து கோடிக் கணக்கிலான பெண்கள் விடுவிக்கப்பட்டு சுய முன்னேற்ற முயற்சிகளுக்கு கூடுதல் நேரமும் பெற்றுள்ளது குறித்து, இன்று, **சேவா சங்கல்ப் அபியான்** என்னும், இந்த சிறப்பு தொடரில் காண்போம்...

(வாய்ஸ்)

சமையல் அறையில் விறகடுப்பினால் ஏற்படும் புகையில் இருந்து பெண்களைப் பாதுகாப்பதுடன், பெண்களின் கண்ணியத்தை மேம்படுத்தி, குறிப்பாக ஏழை குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கும் சம வாய்ப்பை வழங்கும் நோக்கிலான பிரதமரின் உஜ்வாலா திட்டம், 2016-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. நடுத்தர குடும்பத்தினர் மட்டுமே எல்பிஜி இணைப்பு பெற முடியும் என்ற நிலையை மாற்றி, சாதாரண ஏழை குடும்பத்தினரும், பெண்களின் பெயரிலேயே எல்பிஜி இணைப்பு பெறலாம் என்ற நிலை இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டதால் பெரும் எண்ணிக்கயிலான ஏழைப் பெண்கள், புகையற்ற தூய சமையலுக்கு மாறினர்.

இவ்வாண்டு மே மாதம் வரை இத்திட்டத்தின் கீழ் பத்தரைக் கோடிக்கும் அதிகமான எல்பிஜி இணைப்புகள், ஏழை பெண்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. கடந்த நிதியாண்டில் மட்டும் 45 கோடிக்கும் அதிகமான எல்பிஜி சிலிண்டர்கள், உஜ்வாலா திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. உஜ்வாலா திட்டப் பயனாளிகளின் சிலிண்டர் கோரிக்கையும் ஆண்டுக்கு 3 என்ற அளவில் இருந்து, ஆண்டுக்கு 5 ஆக அதிகரித்துள்ளது.

தேசிய அளவில் மொத்தம் உள்ள எல்பிஜி இணைப்புகளின் எண்ணிக்கை 2014-ஆம் ஆண்டில் சுமார் பதினாலரை கோடியாக இருந்த நிலையில், நடப்பாண்டில் இந்த எண்ணிக்கை 33.39 கோடியாக அதிகரித்துள்ளது. 2014-15-ஆம் ஆண்டில் 17.6 மில்லியன் டன்னாக இருந்த எல்பிஜி நுகர்வும், கடந்த நிதியாண்டில் 34 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது.

பிரதமரின் உஜ்வாலா திட்டத்தினால், பெண்கள் சமையல் அறையில் செலவிடும் நேரம் குறைந்து, மகளிர் ஆரோக்யம் மேம்பட்டு இருப்பதுடன், கல்வி மற்றும் சுய முன்னேற்றத்திற்கான பெண்களின் இதர முயற்சிகளுக்கும், கூடுதல் நேரம் கிடைத்துள்ளது. குடும்ப அளவிலான முடிவெடுக்கும் நடைமுறைகளில் அதிகம் பங்கேற்பதற்கான வாய்ப்பையும், இத்திட்டம் பெண்களுக்கு வழங்கி உள்ளது. ஏழைப்

பெண்களுக்கான பிரதமரின் உஜ்வாலா திட்டம், சமையலறைக்கு வெளியிலும், சமூக அளவிலான பல பயன்களை வழங்கி வருவதில் ஐயமில்லை.

## அமைச்சரவை

ரயில்வே ஊழியர்களுக்கு, 78 நாள் சம்பளத்தை, உற்பத்தி திறனுடன் இணைந்த போனசாக வழங்க, மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இதனால் 11 லட்சத்து 40 ஆயிரம் ரயில்வே ஊழியர்கள் பயன் பெறுவார்கள் என்று, ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், இன்று மாலை புதுடெல்லியில், செய்தியாளர் கூட்டம் ஒன்றில் தெரிவித்தார். தகுதி உள்ள ரயில்வே ஊழியர்களுக்கு, அதிகபட்சமாக, 17 ஆயிரத்து 951 ரூபாய் போனஸ் கிடைக்கும் என்றும், அவர் கூறினார். மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகம் மூலம், மாற்றுத் திறனாளிகளுக்கு சமூக பாதுகாப்பு வழங்குவதற்கான, தேசிய சமூக உதவித் திட்டத்தை, மொத்தம் 53 ஆயிரத்து 428 கோடி ரூபாய் செலவில், 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கவும், மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அனைத்து 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், மொத்தம் 3 கோடியே 20 லட்சம் பேர், இதனால் பயன் அடைவார்கள் என்றும், திரு வைஷ்ணவ் கூறினார்.

## காசநோய்

2015-முதல் 2024-ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் இந்தியாவில், புதிதாக கண்டறியப்படும் காசநோயாளிகளின் எண்ணிக்கை 21 சதவிகிதம் குறைந்துள்ளது. இதே கால கட்டத்தில் காசநோய், உலக அளவில் 12 சதவிகிதம் மட்டுமே குறைந்து இருப்பதாக, உலக சுகாதார அமைப்பின் அறிக்கையில் தெரிய வந்துள்ளது. சம்பந்தப்பட்ட ஆண்டுகளில், முறையான சிகிச்சையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள காசநோயாளிகளின் எண்ணிக்கையும், உலக சராசரியை காட்டிலும் அதிகமாக இந்தியாவில், 92 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. இதுகுறித்து கூடுதல் விவரங்கள்..............

(வாய்ஸ்)

இந்தியாவில், காசநோயால் பாதிக்கப் பட்டவர்களை கண்டு பிடித்து சிகிச்சை அளிப்பதில், மக்கள் பங்கேற்பு, மற்றும், நவீன தொழில் நுட்பங்களின் பயன்பாட்டிற்கு, அதிக முக்கியத் துவம் அளிக்கப்படுகிறது. காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்குவதற்கான இயக்கத்தின் கீழ், நாட்டில் இதுவரை, 28 கோடிக்கும் அதிகமானவர்களுக்கு, காசநோய்ப் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. 20 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு, காசநோய்க்கு எதிரான தடுப்பு சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்தின் கீழ், அனைத்து பொது சுகாதார நிலையங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகளிலும், காசநோய்ப்

பரிசோதனை மற்றும் சிகிச்சை, இலவசமாக வழங்கப்படுகிறது. காசநோய் இல்லாத இந்தியா இயக்கத்தில், 5 லட்சத்து 70 ஆயிரத்திற்கும் அதிகமான Nikshay தன்னார்வ தொண்டர்கள், புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர். காசநோய் ஒழிப்பு பணிகளில் சமூகப் பங்கேற்பை, மேலும் வலுப்படுத்தும் வகையில், JOSH என்னும் கூட்டு சுகாதாரக் குழுக்கள், அண்மையில் அமைக்கப் பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

## புதுச்சேரி-விளையாட்டு

புதுச்சேரியில் இன்று மாலை நடைபெற்ற தேசிய விளையாட்டு தின விழாவில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, கேலோ புதுச்சேரி விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, பரிசுகளை வழங்கி சிறப்பித்தார். அண்மைக் காலங்களில் கிராமப் புறங்களைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், குறிப்பாக பெண்கள் தான், சர்வதேச விளையாட்டு போட்டிகளிலும் சாதனை படைத்து வருவதாக அவர் கூறினார். விளையாட்டை பொழுது போக்காக பார்க்கும் நிலை தற்போது மாறி இருப்பதாகவும், இன்றைய விளையாட்டு வீரர்களின் சாதனைகள், எதிர்காலத்தில் இளைஞர்களை ஊக்கப்படுத்துவதாக அமைதல் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். கருவடிக்குப்பம் பெருந்தலைவர் காமராஜர் மணி மண்டபத்தில், முதலமைச்சர் திரு ரங்கசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மாநில விளையாட்டுத் துறை அமைச்சர்

திரு ராஜசேகரன், சட்டமன்ற உறுப்பினர் திரு ஜோஸ் சார்லஸ் மார்ட்டின், மற்றும், விளையாட்டு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## புதுச்சேரி-கர்மயோகா

அரசு ஊழியர்கள், எந்த ஒரு சூழலிலும் மன அழுத்தத்திற்கு ஆளாகாமல், மக்கள் சேவை ஒன்றையே கடமையாகக் கொண்டு செயல்படுவது எப்படி என்பது குறித்து, ஜிப்மர் கலையரங்கில் இன்று நடைபெற்ற பயிற்சி முகாமை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தொடக்கி வைத்தார். மத்திய அரசின் கர்மயோகி இயக்கத்தின் நோக்கங்களுக்கு ஏற்ப, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்ச்சி, பாரதியார்-அரவிந்தர் போன்ற கர்மயோகிகளின் பூமியான, புதுச்சேரியில் நடைபெறுவது, மிகவும் பொருத்தமானது என்று, அவர் கூறினார்.

## தட்டாஞ்சாவடி

புதுச்சேரியில் அண்மையில் நடைபெற்ற தட்டாஞ்சாவடி சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில் என் ஆர் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்ற திரு அசோக் ஆனந்த் இன்று 16-ஆவது சட்டப் பேரவையின் உறுப்பினராக பதவி ஏற்றுக் கொண்டார். சட்டப் பேரவையில் உள்ள சபாநாயகர் அறையில் இன்று காலை நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டப்பேரவைத் தலைவர் திரு அன்பழகன், திரு அசோக் ஆனந்திற்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார். தொடர்ந்து முதலமைச்சர் திரு ரங்கசாமி, திரு அசோக் ஆனந்திற்கு சால்வை அணிவித்தும்,

பூங்கொத்து வழங்கியும் வாழ்த்து தெரிவித்தார். நிகழ்ச்சியில் அமைச்சர்கள் திரு ராஜவேலு, திரு சிவக் கொழுந்து, திரு ராஜசேகரன், அரசுக் கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## வானிலை

வடகிழக்கு பருவமழை, தென்னிந்தியாவின் தென் பகுதிகளில் நாளை தொடங்க, சாதகமான சூழல் தென்படுவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்று நாகை, மயிலாடுதுறை, ராமநாதபுரம் மாவட்டங்களின் ஓரிரு இடங்கள், மற்றும், காரைக்கால் பகுதியில், பலத்த காற்றுடன் கூடிய, கனமுதல் மிக கன மழை பெய்யக் கூடும் என்றும், தஞ்சை,திருவாருர், கடலூர், மாவட்டங்கள், மற்றும், புதுச்சேரியில் பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 20-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, நாகை மாவட்டம் கோடிய கரையில், 5 செமீ மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில் 3 செமீ, மற்றும் காரைக்காலில் 2 செமீ மழை பெய்துள்ளது.

## புதுச்சேரி விடுதலை நாள்

புதுச்சேரி விடுதலை தின விழா வரும் நவம்பர் ஒன்றாம் தேதி கொண்டாடப்பட உள்ளதை முன்னிட்டு, இதற்கான முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம், தலைமைச் செயலகத்தில் உள்ள கருத்தரங்க கூடத்தில், இன்று நடைபெற்றது. செய்தி-விளம்பரத் துறை செயலர் திரு முகமது ஹசன் அபித் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கிழக்குப் பகுதி காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி ஸ்ருதி எரகட்டி, மற்றும், காவல், தீயணைப்பு, கல்வி, சுகாதாரம், பொதுப் பணி, சுற்றுலா, கலை பண்பாடு உட்பட சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். விடுதலை போராட்ட வீரர்கள் பிரிவு, முப்படையினர் நலத்துறை மற்றும் தேசிய மாணவர் படை பிரதிநிதிகளும் கூட்டத்தில் பங்கேற்றனர்.

## புதுச்சேரி-சாலை பாதுகாப்பு

புதுச்சேரியில் சாலை பாதுகாப்பு மற்றும் அவசர கால நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை மேம்படுத்துவது தொடர்பாக, மாநில அரசின் போக்குவரத்து துறை, ALERT தன்னார்வ தொண்டு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இந்த உடன் பாட்டின் கீழ், பி ஆர் டி சி பேருந்து ஓட்டுனர்கள், மற்றும், லாரி-ஆட்டோ ஓட்டுனர்களுக்கு, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்றும், வாகனப் பதிவு, ஓட்டுனர் உரிமம் போன்ற பல்வேறு தேவைகளுக்காக போக்குவரத்து துறை அலுவலகத்திற்கு வரும் பொது

மக்களுக்கும் விழிப்புணர்வு தகவல்கள் வழங்கப்படும் என்றும் போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது. விபத்துக்களைத் தடுப்பதில், மாணவர்கள். இளைஞர்கள் உட்பட அனைத்து பிரிவு மக்களின் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையிலும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்தியாவின் கலாச்சாரப் பயணம், பன்னெடுங்கால பண்பாட்டுப் பரிமாற்றங்களையும், அறிவுப் பகிர்வையும், அடிப்படையாகக் கொண்டது என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

ரயில்வே ஊழியர்களுக்கு, 78 நாள் சம்பளத்தை, போனசாக வழங்க, மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இந்தியாவில் புதிதாக கண்டறியப்படும் காசநோயாளிகளின் எண்ணிக்கை, உலக சராசரியை விட, அதிக அளவில் குறைந்துள்ளது.

விளையாட்டு வீரர்களின் சாதனைகள், எதிர்காலத்தில் இளைஞர்களை ஊக்கப்படுத்துவதாக அமைய வேண்டும் என, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார்.

## இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

--------------------------------